**சுருக்கம்**

**பணியமைப்பு – நகராட்சிகள் – மயான உதவியாளர்கள் – காலியாக உள்ள துப்புரவுப் பணியாளர் பணியிடங்களில் காலமுறை ஊதிய விகிதத்தில் பணியமர்த்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.**

---

**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நப4(2)) துறை**

**அரசாணை (2டி) எண். 18** **நாள்:11.01.2008**

**படிக்க:**

**நகராட்சி நிர்வாக ஆணையர் கடிதம் ந.க.எண். 19710/07/ஜே2, நாள் 08.01.2008**

**ஆணை:**

2007–08 சட்டமன்றக் கூட்டத் தொடரில் உள்ளாட்சி அமைப்புகளின் கட்டுப்பாட்டில் உள்ள மயானங்களில் பணிபுரியும் உரிமம் பெற்ற வெட்டியான் பணியாளர்களை காலமுறை ஊதியத்தில் மயான உதவியாளர்கள் என பணி நியமனம் செய்யப்படுவார்கள் என்று அரசு அறிவித்துள்ளது.

2. இவ்வறிவிப்பிற்கிணங்க, பார்வையில் படிக்கப்பட்ட கடிதத்தில், தற்போது நகராட்சிகளின் பராமரிப்பில் உள்ள இடுகாடு மற்றும் சுடுகாடுகளில் பகுதி நேர பணியாளர்கள் (மயான வெட்டியான்கள்) இருப்பின் அவர்களை மயான உதவியாளர்களாக பெயர் மாற்றம் செய்யவும், இதற்காக தனியாக பணியிடம் தோற்றுவிக்கப்படாமல் அனுமதிக்கப்பட்டு காலியாக உள்ள துப்புரவு பணியாளர் பணியிடங்களை மாற்றி மயான உதவியாளர்களாக நியமனம் செய்யவும், அவர்களுக்கு துப்புரவு பணியாளரின் ஊதிய விகிதமான ரூ. 2500 – 50 – 2650 என்ற காலமுறை ஊதியத்தில் ஊதிய நிர்ணயம் செய்யலாம் எனவும் நகராட்சி நிர்வாக ஆணையர் அரசுக்கு பரிந்துரை செய்து, இது குறித்து அரசு ஆணை வழங்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

3. நகராட்சி நிர்வாக ஆணையரின் செயற்குறிப்பினை அரசு கவனமாக ஆய்வு செய்தது. ஆய்வுக்குப்பின், கீழ்க்கண்டவாறு அரசு ஆணையிடுகிறது:-

(i) தற்போது நகராட்சிகளின் பராமரிப்பில் உள்ள இடுகாடு மற்றும் சுடுகாடுகளில் பகுதி நேர பணியாளர்கள் (மயான வெட்டியான்கள்) இருப்பின், அவர்களை மயான உதவியாளர்கள் என பெயர் மாற்றம் செய்யவும், இதற்காக தனியாக பணியிடம் தோற்றுவிக்கப்படாமல் அனுமதிக்கப்பட்டு காலியாக உள்ள துப்புரவு பணியாளர் பணியிடங்களை மாற்றி மயான உதவியாளர்களாக நியமனம் செய்யவும், அவர்களுக்கு துப்புரவு பணியாளரின் ஊதிய விகிதமான ரூ. 2500 – 50 – 2650 என்ற காலமுறை ஊதியத்தில் ஊதிய நிர்ணயம் செய்து நடவடிக்கை எடுக்கவும் நகராட்சி நிர்வாக ஆணையர் அனுமதிக்கப்படுகிறார்.

(ii) இடுகாடுகள் மற்றும் சுடுகாடுகளை பராமரித்து வரும் உரிமம் பெற்ற வெட்டியான்களாக பணிபுரிந்து வரும் பயான வெட்டியான்களுக்கு முன்னுரிமை தரப்பட வேண்டும்;

(iii) மேற்படி பயான உதவியாளர்களுக்கு வயது, கல்வித் தகுதி, வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்தல் போன்றவற்றில் இருந்து விதித்தளர்வு செய்வதற்கான ஆணை தேவைப்படின் பணி அமர்த்திய பின்பு தக்க செயற்குறிப்பு அனுப்புமாறு நகராட்சி நிர்வாக ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்;

(iv) மேற்படி பயான உதவியாளர்கள் பணியிடத்திற்கு தேவைப்படும் விதி திருத்தங்களுக்கான உரிய செயற்குறிப்பினை அனுப்புமாறும் நகராட்சி நிர்வாக ஆணையரை கேட்டுக் கொள்ளப்படுகிறார்;

(ஆளுநரின் ஆணைப்படி)

கே. தீனபந்து
அரசு செயலாளர்

பெறுநர்
நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை – 600 005.
அனைத்து நகராட்சி ஆணையாளர்கள் (நகராட்சி நிர்வாக ஆணையர் வழியாக)
அனைத்து மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர், (நகராட்சி நிர்வாக ஆணையர் வழியாக)
இயக்குநர் உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை, சென்னை – 600 108.

நகல்
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (தநி2) துறை, சென்னை – 9.
இ.கோ/ உ.ந

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்